சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 06.01.2020

# அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் மார்கழி மாதம் 21–ஆம் நாள் (ஜனவரி திங்கள் 06–ஆம் நாள்:– 06.01.2020) திங்கள் கிழமையன்று பிற்பகல் 03.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

14ஆம் மத்திய நிதிக்குழுவின் 2019–2020ம் ஆண்டிற்கான முதல் தவணை மான்ய திட்டத்தின் கீழ் குடிநீர்க் குழாய் Internal Plumping பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.161.15 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அண்ணாமலைநகர் மெயின் ரோடு மற்றும் அண்ணாமலைநகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி | ரூ.35.00 |
| 2. | மயானம் சாலை (மேற்கு பகுதி) தடுப்பு சுவருடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் லெட்சுமி நகரில் தார்ச்சாலை அமைக்கும் பணி | ரூ.50.00 |
| 3. | முத்தாலம்மன் கோவில் ரோடு மற்றும் சிவராமன் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி | ரூ.48.00 |
| 4. | பொன்னகர் மற்றும் ராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி | ரூ.28.15 |
| | மொத்தம் | ரூ.161.15 |

மேற்கண்ட பணிகளில் வரிசை எண்.1 மற்றும் 4க்கு இந்நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதியும், வரிசை எண்.2 மற்றும் 3க்கு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. வரிசை எண்.1 மற்றும் 4க்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.2 மற்றும் 3க்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.43/2020/இ1)

**தீர்மான எண், நாள்** **789, நாள்.06.01.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட கருங்கட்டான்குளம் கிராமம் வார்டு–D, பிளாக்–16, நகரளவு எண்.17/5 (பழைய சர்வே எண்.153/1)–ல் கட்டுப்பட்ட 59 செண்ட் பரப்பளவு உள்ள இடத்திற்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் ந.க.எண்.3986/16/மம3, நாள்.03.10.2019ன்படி, தொழில்நுட்ப அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது. எனவே, அதன்படி மனுதாரர் பத்திரப்பதிவு ஆவண எண்.5780/2019, நாள்.25.11.2019ன்படி, சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் மேதகு ஆளுநர் அவர்களுக்கு உத்தேச சாலை, புல்வெளி, உள்ளாட்சி உபயோகத்திற்கான இடம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உபயோக இடம் என தானமாக வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மனுதாரரால் உரிய இடங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், உத்தேச சாலையில் தார்சாலை மற்றும் வடிகால் அமைத்து உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்தவுடன் இறுதி ஒப்புதலுக்கு பரிந்துரை செய்வதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** **790, நாள்.06.01.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.03

இந்நகராட்சி வார்டு எண்.13, விநாயகர் கோவில் தெருவில் IHHL திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டிய 41 நபர்களுக்கு பாதாள சாக்கடைக்கான மெயின் குழாய் மற்றும் Manhole இல்லாத காரணத்தினால் பாதாள சாக்கடை இணைப்பு வழஙகுவதற்கு புதிய மெயின் குழாய் மற்றும் Manhole அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.34 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.679, நாள்.15.07.2019ன்படி அனுமதி பெறப்பட்டதில் அலுவலகக்குறிப்பில் மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்பொழுது பொது நிதியில் போதிய நிதியில்லாத காரணத்தினாலும், மேற்படி பணி பாதாள சாக்கடை பணி என்பதாலும், மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் திருத்திய அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **791, நாள்.06.01.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.04

இந்நகராட்சி பகுதிகளில் ODF++ ஆய்வு மேற்கொள்ள இருப்பதால் தேவர் நகர் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள கழிப்பிடங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0050/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **792, நாள்.06.01.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகன வண்டி எண்.TN60S**2193**க்கு புதிய மின் கலப்பெட்டி (Exide Express Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு வரப்பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | **Imperial Battery Corner, Theni** | ரூ.13300 |
| 2. | **M.R.Auto Mobiles & Battery Service, Theni** | ரூ.13960 |
| 3. | **Balaji Battery Service, Theni** | ரூ.13600 |

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரிசை எண்.1ல் காணும் குறைவான விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6437/2018/இ2)**

**தீர்மான எண், நாள்** **793, நாள்.06.01.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.06**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**24**, மயானம் சாலையில் உள்ள சேதமடைந்த பாலத்தினை இடித்துவிட்டு, புதியதாக பாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.**9.90** இலட்சத்திற்கு **20.12.2019**ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.D.தமிழ்ராஜன், ஒப்பந்தக்காரர் – 0.20% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 1.30% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.20%) திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4564/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **794, நாள்.06.01.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை கையாளும் பணியில் 27 வார்டுகளிலும் நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் 54 பேர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு கடந்த 2016–17–ஆம் ஆண்டில் வாங்கி வழங்கப்பட்ட Safety Equipments (பாதுகாப்பு உபகரணங்கள்) தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்ததால், தற்பொழுது பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, திடக்கழிவு மேலாண்மை பணிகளை சுணக்கமின்றி பணியாளர் கையாளவும், சுகாதார முறைப்படி பேணவும் வேண்டியுள்ளதாலும், பொது மக்கள் மற்றும் நகர்நல விரும்பிகள் துப்புரவு பணியாளர்கள் கையுறை இல்லாமல் கையாளுவது குறித்து வருகின்ற புகார்களை தவிர்க்கவும், அவசர அவசியம் மற்றும் துப்புரவுப் பணியாளர்களின் நலன் கருதியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சின்னமனூர் நகராட்சி பகுதியில் நடைபெற்ற திடக்கழிவு மேலாண்மை பணி ஆய்வின் போது வழங்கப்பட்ட அறிவுரையின்படியும், துப்புரவுப் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படியான பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்க அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும், உத்தேச செலவு ரூ.4.00 இலட்சத்திற்கு ஆணையர் மன்ற அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

1. ஒளிரும் ஜாக்கெட் – 54 எண்ணம்
2. கையுறை – 54 (4 செட்)
3. தலை கவசம் – 54 எண்ணம்
4. முகவுறை – 54 எண்ணம்
5. கம்பூட் – 54 எண்ணம்
6. மழை கோட் – 54 எண்ணம்

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **795, நாள்.06.01.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

சின்னமனூர் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உள்ள Septic Tank கழிவு நீரை கால்வாயில் விடுதல் அற்ற நகரமாக ODF++ அறிவிக்கப்படவுள்ளது. எனவே அது தொடர்பாக பொது மக்கள் தங்கள் மேற்கண்ட கழிவு நீரை நகராட்சி கழிவு நீர் ஊர்தி மற்றும் தனியார் கழிவு நீர் ஊர்தி (பதிவு பெற்றது) மூலம் மிகவும் பாதுகாப்பாக சுகாதார முறைப்படி அகற்றி நகராட்சியின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (STP) சேர்க்க அறிவுறுத்தி பொது மக்களிடம் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகள் கேட்டு விளம்பர அறிவிப்பு செய்தித் தாளில் வெளியிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட விளம்பரம் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி விளம்பர அறிவிப்பு வெளியிட்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1238/2015/எச்1)**

**தீர்மான எண், நாள்** **796, நாள்.06.01.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60S6634க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள **03.01.2020–ஆம்** தேதிய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ், கம்பம் | ரூ.28800/– |
| 2. | கோல்டன் மோட்டார்ஸ், கம்பம் | ரூ.31900/– |

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் நிறுவனம் கோரிய குறைவான விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2).**

**தீர்மான எண், நாள்** **797, நாள்.06.01.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| **அ).1 குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 40HP Motor சரி செய்யும் பணிக்கு.** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.20400/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.21450/– |
| **2) குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 30HP Motor சரி செய்யும் பணிக்கு** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.28200/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.29350/– |
| **3) குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 15HP Motor சரி செய்யும் பணிக்கு** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.13425/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.13600/– |
| **ஆ).1.தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 7.5HP Motor Pump Motor சரி செய்யும் பணிக்கு** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.11500/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.11800/– |
| **2) தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 7.5HP Motor Pump சரி செய்யும் பணிக்கு** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.17350/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.17840/– |
| **இ) 1). மினி பவர் பம்ப்–இல் உள்ள பழுதடைந்த மோட்டார்க்கு சரி செய்யும் பணிக்கு** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.4200/– |
| 2. | திரு.கே.வனராஜ் | ரூ.4400/– |

அலுவலகக் குறிப்பு:– 1. வரிசை எண்.1ல் காணும் குறைவான விலைப்புள்ளி கோரிய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண், நாள் 798, நாள்.06.01.2020

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு 37 DBC தற்காலிக பணியாளர்களால் 27 வார்டுகளிலும் உள்ள 12000க்கும் அதிகமான வீடுகள் மற்றும் 31 பள்ளிகள், பொது இடங்கள், வழிபாட்டுத் தளங்களில் கொசு புழுக்கள் அழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சின்னமனூர் நகராட்சி பகுதியில் கடந்த நான்கு மாதங்களில் அதிகளவு காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் வேகமாக பரவி வருவதாலும், அவற்றை கட்டுப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலும் துணை சுகாதார இணை இயக்குநர், தேனி மற்றும் மாவட்ட பூச்சியியல் வல்லுனர், மாவட்ட கொள்ளை நோய் நிபுணர், தேனி மாவட்ட ஆட்சியர் வளாகம் அவர்களின் ஆலோசனைக் கூட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற வீடியோ கான்ப்ரன்ஸ் (VC)-இல் தமிழக முதன்மை செயலாளர் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர் அவர்களும் டெங்கு மற்றும் கொசுக்களின் மூலம் பரவும் தொற்று நோய்களையும் தண்ணீர் மூலம் பரவும் தொற்று நோய்களையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. தற்சமயம் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாலும், இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் பெரும்பாலும் பணி நிமித்தமாக கேரளா சென்று வரும் நிலை உள்ளது. எனவே, அவசர அவசியம் மற்றும் பொது மக்களின் நலன்கருதியும், காய்ச்சல் மற்றும் டெங்கு, சிக்குன் குனியா போன்ற கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளின்படி, காய்ச்சல் கண்டவர் அதனைச் சுற்றியுள்ள வீடுகள் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக சுழற்சி முறையில் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் உத்திரவிட்டுள்ளதால், நிலவேம்பு கசாய பவுடர் போன்றவற்றை தேவையான அளவு இருப்பில் வைத்திருக்கவும், இருப்பில் வைத்திருக்கும் அளவினை (Stock Position) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி ஆகியோர்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளதாலும், தற்சமயம் கையிருப்பு இல்லாததாலும் அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி தேவையான அளவு நிலவேம்பு பவுடர் ஆகியவற்றை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட டாம்கால் நிறுவனத்திடமிருந்து வாங்க ஆகும் உத்தேச செலவினம் தோராயமாக ரூ.6,00,000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0094/2020/எச்1)

தீர்மான எண், நாள் 799, நாள்.06.01.2020

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.120000/—க்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 20.12.2019ம் தேதியன்று கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், மெயின் ரோடு, சின்னமனூர் – ரூ.117000/—
2. நேஷனல் பாடி பில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.121200/—

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4598/2019/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **800, நாள்.06.01.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******